

- வாழ்வோம்

எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!

‘சட்டம்-ஒழுங்கு சீர்கேடு’,‘விலைவாசி உயர்வு’,‘ஆளும் த.வெ.க. கட்சியில் நிர்வாகிகளின் பாலியல் அத்துமீறல்கள்’ என நாளுக்கு நாள் தமிழ்நாட்டின் இயல்புநிலை மோசமாகச் சீரழிந்துகொண்டிருக்கிறது. அவற்றைச் சரிசெய்வதற்குத் திராணியற்ற அரசு நிர்வாகம்,‘அரசு ஊழியர்களை வேட்டியில் வர வேண்டும்’ எனக் கட்டளையிடுகிறது.

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் ஒரு நிகழ்ச்சியில் பேசுகையில்,‘அரசு ஊழியர்கள் முதலமைச் சர்போல வாரத்தில் ஒரு நாள் அலுவலகத்துக்கு வேட்டி சட்டையில் வர வேண்டும்’ என அறிவித்துள்ளார். அரசு ஊழியர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி யுள்ளது, இந்த அறிவிப்பு. சமூக வலைதளங்களில் எதிர்ப்புகளும் எழுந்துள்ளன. எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யாவின் முகநூல் பதிவு, இப்படிச் சொல் கிறது.

‘தமிழ், தமிழர்கள், தமிழ்நாட்டின்நெசவாளர் கள் நலன் காத்திட, தமிழ்நாடு அரசு செய்வ தற்கு ஆயிரம் விசயங் கள் இருக்கின்றன. ஆனால், அமைச்சர் ராஜ்மோகன், முதலமைச்சர் போல வாரத்தில் ஒருநாள் அரசு ஊழியர்கள் வேட்டி - சட்டை உடுத்தும் ‘மரபு ஆடை தினம்’ என அறிவித்துள்ளார். அடுத்து, முதல்வரைப் போலவே சூட் அணிந்துவர வேண்டும் என்பாரா? பெண் ஊழியர்கள் யாரை முன்மாதிரியாகக் கொண்டு மரபு ஆடை உடுத்த வேண்டும்? என்கிறார்.

யாருடைய பாரம்பரியம்? யாருடைய மரபு என்றால், உடனே தமிழருடையது என்று பூசி மெழுகக்கூடும்.

இன்றைக்கு உடையில் ஆரம்பிப்பார்கள், நாளை உணவுக்குள் வருவார்கள். பிறகு, எதை எப்படி எப்போது வணங்க வேண்டும், நெற்றியில் என்ன இட வேண்டும் என்று ஒவ்வொன்றிலும் தலையிட்டுக் கட்டளையிடு வார்கள். இந்தக் கலாச்சாரக் காவலர்களிடம் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்’ எனக் குறிப்பிட் டுள்ளார். இவர்கள் ஆபத்தானவர்கள் என்பதை மக்கள் உணரத் தொடங்கி விட்டனர்.

மெய்யும் பொய்யும்



கௌதம் ராஜ்

பகுதி 138

சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

‘எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.தி.மு.க.வின் ஆட்சிக்காலத்தில், மறைமுக அதிகார மையங்கள் தமிழ்நாட்டை எப்படியெல்லாம் ஆட்டுவித்தன’ என்பதை அறிந்துகொள்ள உதவும் நூல், முன்னாள் காவல் துறை அதிகாரி, கே.மோகன்தாஸ் எழுதிய ‘MGR: THE MAN AND THE MYTH’. எம்.ஜி.ஆர். என்ற ஆளுமைமீது தான் செலுத்திய தாக்கத்தை, சுயதம்பட்ட பாணியில் எழுதியிருக்கிறார். இந்நூலைப் படிக்கத் தொடங்கினால், அதன் முதல் சில பக்கங்களே, இது எப்படிப்பட்ட நூல் என்பதை உணர்த்தி விடும். அது ஏற்படுத்திய விழிப்பும் கவன உணர்வும் இறுதிவரை தொடரவே செய்கிறது.

எம்.ஜி.ராமச்சந்திரனுக்கு நெருக்கமானவராக, செல்வாக்குமிக்க அரசு அதிகாரியாக அறியப்பட்டவர்; எம்.ஜி.ஆர். எடுத்த முக்கிய முடிவுகளுக்குப் பின்னணியில் தான் இருந்ததை, மூன்று பக்கங்களுக்கு ஒரு முறை ஏதோ ஒரு சம்பவத்தைக் கொண்டு நமக்குத் தெரிவிக்கிறார். எம்.ஜி.ஆர். பற்றிய அந்தரங்க விஷயங்கள் சிலவற்றை இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். ஈழம் குறித்தும் ஈழப் போராட்ட அமைப்புகளை அ.தி.மு.க. எதிர்கொண்ட விதம் குறித்தும் அறிந்துகொள்ள, இந்நூல் ஒரு வகையில் பயனுள்ளதாக இருக்கிறது.

எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் காவல் துறை எடுத்த மக்கள் விரோதப் போக்கை எவ்வித குற்ற உணர்வும் இன்றி, சட்டையில் குத்திக் கொண்ட பதக்கம்போல், பெருமையாக இந்நூலில் பதிவுசெய்துள்ளார். அதே நேரத்தில், ஈழப் போராட்டம் உச்சத்திலிருந்த காலகட்டத்தில் போராளி இயக்கங்களுக்குத் தமிழ்நாடு எப்படிப்பட்ட அடைக்கலத்தை அளித்தது, அந்த அடைக்கலம் ஏற்படுத்திய பின்விளைவுகள் ராஜீவ் படுகொலை வரை சென்றதையும் பதிவுசெய்துள்ளார். ஈழப் போராட்ட இயக்கங்களை காவல் துறையும் எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.தி.மு.க. அரசும் எப்படி அணுகின என்பதை அறிந்து கொள்ள இந்நூல் பயன்படும்.

அதே போல், அ.தி.மு.க.வில் அதிகார மையங்கள் எப்படிப்பட்டவையாக இருந்தன, முடிவுகளைத் தீர்மானிப்பதில் எம்.ஜி.ஆர். கொண்டிருந்த அறுதித்தன்மை ஆகியவற்றை ஓரளவுக்கு அறிந்துகொள்ள முடிகிறது. ஆர்.எம்.வீரப்பன், ஜெயலலிதா, ஜானகி ராமச் சந்திரன், எஸ்.டி.சோமசுந்தரம், இரா.நெடுஞ் செழியன் போன்றவர்கள் உண்மையிலேயே எம்.ஜி.ஆரின் முடிவுகளில் செல்வாக்கு செலுத்துபவர்களாக இருந்தார்களா என்ற கேள்விக்குப் பதில் தேடும் முயற்சியில் இந்நூல் முக்கிய பங்கு வகிக்கும்.

இந்நூலைப் படிக்கத் தொடங்குபவர்கள், தலைப்பைப் படித்ததும் எம்.ஜி.ஆர். குறித்த விமர்சனங்கள் அடங்கிய நூல் என்று எண்ணிவிடக் கூடாது. நூலின் 31-ஆம் அத்தியாயத்தை முதலில் வாசித்துவிட்டு, பிறகு இந்நூலைப் படிக்கத் தொடங்குவது பல தெளிவுகளை நமக்கு வழங்கும். எம்.எஸ்.எஸ் பாண்டியன் தனது ‘IMAGE TRAP’ நூலில், எம்.ஜி.ஆர். வாழ்க்கை வரலாறு நூல்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கும் இலக்கணங்களையே இந்நூலும் கொண்டிருக்கிறது.

இருந்தாலும், பல அரிதான தகவல்களை இந்நூல்மூலம் அறிந்துகொள்ள முடியும். அக்காலகட்டத்தில் நடைபெற்ற வரலாற்றுச் சம்பவங்கள் குறித்த விழிப்புடன் இந்நூலை வாசிக்கத் தொடங்குவது பயனுள்ளதாக இருக்கும்.

...வாசிப்போம்.

செயல்வீரர்களை நெஞ்சில் ஏந்துவோம்!



எம்.கல்யாணசுந்தரம், கும்பகோணம்.

சமையல் பொருள்கள் விலை அனைத்தும் ஏறிவிட்டன. குறிப்பாக, 5 மாதங்களுக்கு முன் 65 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ அரிசியின் தற்போதைய விலை 95 ரூபாய். தி.மு.க. விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்குமா?

முன்னெடுத்துவிட்டதே. கழகத் தலைவரின் உத்தரவுப்படி, முன்னெடுத்துக் களத்தில் இறங்கி, அக்டோபர் 31 அன்று தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறது, தி.மு.க. மகளிர் அணி. அரிசி விலை உயர்வால் அனைத்துத் தரப்பு மக்கள் - குறிப்பாக, பெண்கள் கடுமையாகப் பாதித்துள்ள நிலையில்.. பிரச்சினையை மறைக்கும் வகையில், கூட்டுறவு அங்காடிகளில் 30 ரூபாய்க்கு சன்ன ரக பொன்னி அரிசி வழங்குவதாக த.வெ.க. அரசு நடத்திய நாடகத்தையும், அது சன்ன ரகமும் இல்லை - பொன்னி அரிசியும் இல்லை, ரேஷன் கடையில் விலையில்லாமல் மக்களுக்கு வழங்கப்படும் அரிசியை ‘பாலீஷ்’ போட்டு, மக்க ளிடமே விலைக்கு விற்றிருக் கிறார்கள் என்பதைக் கழக இளைஞர் அணிச் செயலாளர் - எதிர்க்கட்சித் தலைவர் விரிவான தரவுகளுடன் அம்பலப்படுத்தி, ஒரு வாரத் திற்கு மேல் ஆகிவிட்டது. த.வெ.க. அரசுத் தரப்பில் பதிலே இல்லை. நிர்வாகத் திறனற்ற விஜய் அரசுடன் விலைவாசி உயர்வுக்காக மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான மக்கள் பிரச்சினைக்காகப் போராட வேண்டியுள்ளது. அதற்கேற்ப போராட்ட முறைகளைக் கையில் எடுத்து, தி.மு.கழகம் களத்தில் நிற்கிறது.

திராவிடன் பதில்கள் 07

ப.குமாரவேல், திருச்சி.

நீதிக்கட்சி தொடங்கி, தி.மு.க. வரை தாலுகா, மாவட்ட அளவில் மாநாடுகளை நடத்தி, கொள்கை சார்ந்த தொண்டர்களை ஒருங்கிணைத்து ஆட்சியைப் பிடித்த வரலாறு, நம் இயக்கத்திற்கு உண்டு. மீண்டும் அதை ஏன் இப்போது முயற்சி செய்யக் கூடாது?

கொள்கை சார்ந்த தொண்டர்கள், மாநிலம் முழுவதும் பரவலான அளவில் ஒருங்கிணைந்து இயக்கத்தின் வளர்ச்சிக்காகச் செயல்பட வேண்டியது, எல்லா காலத்திலும் அவசியமானதாகும். ஒருங்கிணைக்கின்ற முறையும் அதற்கான வடிவங்களும் காலத்திற்கேற்ற மாற்றங்களைப் பெறுகின்றன. தாலுகா அளவில் மட்டுமல்ல, கிராமக் கிளைகள் வரை தற்போது கழகத்திற்கு அடிப்படைத் தேவை, கொள்கை உணர்வுமிக்க உடன்பிறப்புகளும் அவர்களுக்கிடையிலான வலுவான ஒருங்கிணைப்பும்தான். அதற்கு மாநாடுகளைவிட முக்கியமானது, கட்சிக் கட்டமைப்பு. அந்தக் கட்டமைப்பை ஒருங்கிணைத்து வலுப்படுத்துவதற்கேற்ற செயல்பாடு மிக மிக அவசியம். கழக நிர்வாகிகளைச் சக உடன்பிறப்புகள் வந்து சந்தித்து, ‘வணக்கம்’ சொல்லும்போது, “என்னப்பா... எப்படி இருக்கே? உட்காரு...” என்று சில வார்த்தைகள் பதிலாக வந்தால் போதும். பல மாநாடுகள் சாதிக்க முடியாத ஒருங்கிணைப்பை இந்த வார்த்தைகள் சாதித்துக் காட்டிவிடும்.

கோமதி, பொள்ளாச்சி

100 வயதைக் கடந்து, அண்மையில் மறைவெய்திய கழகத்தின் செயல்வீரர் அண்ணா நகர் சோ.மா.ராமச்சந்திரன் பற்றி?

பேரறிஞர் அண்ணாவின் நினைவாக, 1968-இல் சென்னையில் அண்ணா நகர் என்ற பகுதியை அப்போதைய முதல்வர் கலைஞர் உருவாக்கினார். 1977-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அண்ணா நகர் தொகுதி முதன் முதலாக உருவானது. அதன் முதல் கழக வேட்பாளர் நம் கலைஞர்தான். எமர்ஜென்சி கால மிசா சிறைவாசத்தை அனுபவித்த பகுதிச் செயலாளர் சோ.மா. ராமச்சந்திரன், தொகுதி முழுவதும் சுற்றிச்சுழன்று, கலைஞரின் வெற்றிக்குத் துணை நின்றார். அண்ணா நகர் தொகுதியின் முதல் எம்.எல்.ஏ. கலைஞர் என்ற பெருமை அமைந்தது. 1980 தேர்தலிலும் அண்ணா நகரில் கலைஞர் வெல்வதற்கு சோ.மா.ரா.வின் உழைப்பும் உறுதியான செயல்களும் காரணமாக அமைந்தன. இலங்கைத் தமிழர் நலனுக்காக எம்.எல்.ஏ. பதவியை கலைஞர் ராஜினாமா செய்ததால், 1984-இல் அண்ணா நகரில் நடந்த இடைத்தேர்தலில், சோ.மா.ராமச்சந்திரன் தான் தி.மு.க. வேட்பாளர். ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வின் அராஜகத்தையும் முதல்வர் எம்.ஜி.ஆரின் பிரச்சாரத்தையும் முறியடித்து, வெற்றிபெற்ற செயல்வீரர் அவர். எதிர்வரும் இடைத்தேர்தல் களங்களில் கழக உடன்பிறப்புகள் மனத்தில் பதிய வைத்துக்கொள்ளவேண்டியது, சோ.மா.ராமச்சந்திரன் போன்ற செயல்வீரர்களின் உழைப்பையும் உறுதியையும்தான்.

(திராவிடன் பதில்கள் பகுதிக்கு உடன்பிறப்புகள், வாசகர்கள் தங்கள் கேள்விகளை அனுப்பலாம். வாட்ஸ்ஆப் எண் - 82204 51520)

ஃப்ளாஷ்பேக்



கோ.தங்கராஜ்



திராவிட இயல் மாணவர்!

1997-ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், ‘திராவிட மறுமலர்ச்சி மாமன்றம்’ சார்பில், பயிற்றுவித்த பட்டயப் படிப்பில், கற்றுத் தேர்ந்ததற்காக எனக்கும் ‘திராவிட இயல் மாணவர்’ என்கிற சிறப்புப் பட்டயத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் வாங்கும் வாய்ப்பைப் பெற்றேன். முப்பெரும் விழா என்பதால், கழக மூத்த நிர்வாகிகள் அனைவரும் இடம்பெற்றனர். கழக முன்னோடிகளெல்லாம் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் நானும் பட்டயம் பெற்றபோது, எல்லையில்லா மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடைந்தேன்.

- கோ.தங்கராஜ்,
துணை அமைப்பாளர்,
கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை,
சென்னை வடகிழக்கு.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

Published and Printed by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034
Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Ph: 044 - 45849900